சொன்னாலும் அது எங்களுக்காக விடப்படுகிற எச்சரிக்கையாக்கப்படுகிறது. இன்னும் சொல்லப் போனால் இங்கே உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்தான் அங்கே முதலமைச்சராக இருக்கிறார்கள். இங்கே உள்ள கம்யூனிஸ்ட் பத்திரிகைகளிலே இதைப் போன்ற செய்திகள் வருமா என்றால் வராது. அவர்கள் இந்த மாநிலத்தில் உரிமைகள் என்று வரும்போது இந்த மாநிலத்தின் உரிமைகளுக்காக நிற்பார்கள். அந்த அந்த மாநிலத்தின் உரிமைகளுக்காக ஆங்காங்கு இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி வாதாடும். அதே போல் தான் நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் இது ஏதோ கழக அரசிற்கு வருகிற ஆபத்து, அதற்கு மாத்திரம் தருகிற பதில் என்று எண்ணாமல் தமிழ்நாட்டு மக்களின் உரிமை பாதிக்கப்படுகிற நேரத்திலே நாம் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டுமென்ற அந்த எண்ணத்தின் அடிப்படையில் இயங்க வேண்டுமென்று இதனை எடுத்துக் கூற கடமைப்பட்டு இருக்கிறேன். கேரள அரசுக்கும், நமக்கும் இருக்கிற சுமுகமான சூழ்நிலையை கேரள முதலமைச்சரோடு பேசித் தீர்த்துக் கொள்ள நாம் தயாராக இருக்கிறோம் என்பதை எடுத்து விளக்க இந்த ஒற்றிவைப்புத் தீர்மானம் பயன்பட்டது என்ற அளவிலே இதை விவாதிக்கத் தேவையில்லை, விட்டு விடலாம் என்று தங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு எந்த விவாதமும் இதன் மீது தேவையில்லை என்ற வகையிலே இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(4) அறிவிப்புகள்.

(அ) சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவும், (சட்டப்பேரவை மசோதா எண் 4/1971) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவும் (சட்டப்பேரவை மசோதா எண் 5/1971), சட்ட மன்ற மேலவையில் 1971-ம் ஆண்டு மார்ச் திங்கள் 30-ம் நாளன்று ஆய்வுக்கு எடுக்கப்பட்டு பரிந்துரை எதும் செய்யப்படவில்லை என்று சட்ட மன்ற மேலவைத் தலைவரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது.

5. அரசினர் மசோதா.

1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அலுவல் அரசினர் மசோதா, 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதாவைப் பேரவைக்கு அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, **நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.**